**சீத்தாவக்கபுர நகர சபை - 2023**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

சீத்தாவக்கபுர நகர சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, தேறிய சொத்துக்கள்/ உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களையும் உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்களுடன் கூடிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (அதிகாரம் 255) 181(1) ஆம் உப பிரிவினதும், 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் சீத்தாவக்கபுர நகர சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நகர சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நகர சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நகர சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நகர சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் குறிப்பிடப்பட்ட தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் நகர சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை.

| உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை. | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) நியமத்தின் இலக்கம் 3.28 இன் பிரகாரம் மற்றும் அதன் இணைப்பு 2 இன் விளக்கமளித்தல் மற்றும் வழிகாட்ட லின் EG 6.2 இன் பிரகாரம் செயற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்து உருவான காசுப்பாய்ச்சலைக் கணிப்பீடு செய்யும் போது முதலீட்டு வருமானமாக ரூபா 3,485,722 குறைக்க | 2024.12.31 இல் உள்ளவாறு நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது சரி செய்யப்படும் | காசுப்பாய்ச்சல் கூற்றை சரியாக தயாரித்து சமர்ப்பித்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வேண்டியிருந்த போதிலும் ரூபா 3,857,151 சேர்க்கப்பட்டதன் காரணமாக காசுப்பாய்ச்சல் கூற்று ரூபா 7,342,873 அதிகரித்தும் சேர்க்கப்பட வேண்டிய வருடாந்த பெறுமானத் தேய்வு ரூபா 23,375,705 தொகைக்குப் பதிலாக ரூபா 21,995,916 சேர்க்கப்பட்டதன் காரணமாக அந்தக் காசுப்பாய்ச்சல் ரூபா 1,379,789 குறைத்தும் காண்பிக்கப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | நியமத்தின் இலக்கம் 3.29 இன் பிரகாரம் மற்றும் அதன் இணைப்பு 2 இன் விளக்கமளித்தல் மற்றும் வழிகாட்டலின் EG 6.3 இன் பிரகாரம் முதலீட்டு செயற்பாடுகளிலிருந்து உருவான காசுப்பாய்ச்சல் கணிப்பீடு செய்யும் போது கிடைக்கப்பெற்ற வட்டியாக ரூபா 2,109,699 சேர்க்கப்பட வேண்டியிருந்த போதிலும் ரூபா 3,857,151 சேர்க்கப்பட்டதன் காரணமாக காசுப்பாய்ச்சல் கூற்று ரூபா 1,747,452 அதிகரித்தும், ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்காக செலவிடப்பட்ட ரூபா 4,228,672 குறைக்க வேண்டியிருந்த போதிலும் ரூபா 6,151,751 சேர்க்கப்பட்டதன் காரணமாக அந்தக் காசுப்பாய்ச்சல் ரூபா 10,388,423 அதிகரித்தும் காண்பிக்கப்பட்டிருந்தது. | மேற்படி | மேற்படி |
| (இ) | நியமத்தின் இலக்கம் 3.30 இன் பிரகாரம் மற்றும் அதன் இணைப்பு 2 இன் விளக்கமளித்தல் மற்றும் வழிகாட்டலின் EG 6.4 இன் பிரகாரம் நிதிச் செயற்பாடுகளிலிருந்து பெறப்பட்ட காசுப்பாய்ச்சலைக் கணிப்பீடு செய்யும் போது நீண்டகாலக் கடன் பெறுதல் மீளச் செலுத்துதல் ரூபா 7,221,607 குறைக்க வேண்டியிருந்த போதிலும் ரூபா 414,925 குறைக்கப்பட்டதன் காரணமாக அந்தக் காசுப்பாய்ச்சல் ரூபா 6,806,682 அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2024.12.31 இல் உள்ளவாறு நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது சரி செய்யப்படும் | காசுப்பாய்ச்சல் கூற்றை சரியாக தயாரித்து சமர்ப்பித்தல் வேண்டும். |

### 1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2022 ஆம் ஆண்டில் நிலையான சொத்துக்கள் ரூபா 1,986,381 அதிகரித்துப் பெறுமானத் தேய்வு செய்யப்பட்ட தவறு மீளாய்வாண்டில் சரிசெய்யும் போது சொத்துக் கணக்கு வரவு வைத்து பெறுமானத் தேய்வு ஒதுக்கக் கணக்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. | 2024.12.31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது சரிசெய்யப்படும். | கணிக்கீடு செய்தல் சரியாக மேற்கொள்ளப்பட ல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் திசம்பர் 31 இல் உள்ளவாறு வாகன பெறுமானத் தேய்வு ஒதுக்கக் கணக்கில் மீதி ரூபா 2,120,898 ஆக இருந்த போதிலும் நிதிக் கூற்றுக்களில் ரூபா 14,328,438 ஆக காண்பிக்கப்பட்டதன் காரணமாக ஆதனங்கள், பொறிகள் மற்றும் உப கரணங்களின் பெறுமதி ரூபா 12,207,540 குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | மேற்படி | மேற்படி |
| (இ) | மீளாய்வாண்டின் வாகன பெறுமானத் தேய்வு ரூபா 3,761,378 ஆக இருந்த போதிலும் நிதிக் கூற்றுக்களில் ரூபா 2,380,887 ஆக கணக்கீடு செய்யப்பட் டதன் காரணமாக ஆண்டின் மிகை ரூபா 1,380,491 அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | மேற்படி | மேற்படி |
| (ஈ) | மீளாய்வாண்டின் திசம்பர் 31 இல் உள்ளவாறு நிலையான வைப்புப் பெறுமதி ரூபா 28,294,770 ஆக இருந்த போதிலும் நிதிக் கூற்றுக்களில் ரூபா 28,364,065 ஆக காண்பிக்கப்பட்ட தன் காரணமாக நிலைப்பு வைப்புப் பெறுமதி ரூபா 69,295 அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | மேற்படி | மேற்படி |
| (உ) | மீளாய்வாண்டின் திசம்பர் 31 இல் உள்ளவாறு பெற வேண்டிய நிலையான வைப்பு வட்டி வருமானம் | 2024.12.31 இல் உள்ளவாறு நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது சரி | கணிக்கீடு செய்தல் சரியாக மேற்கொள்ளப்பட |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா 1,553,645 ஆக இருந்த போதிலும் நிதிக் கூற்றுக்களில் ரூபா 1,042,802 ஆக காண்பிக்கப்பட்டதன் காணரமாக பெற வேண்டிய நிலையான வைப்பு வட்டி வருமானம் ரூபா 510,843 குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | செய்யப்படும் | ல் வேண்டும். |
| (ஊ) | மீளாய்வாண்டிற்கான நிலையான வைப்பு வட்டி வருமானம் ரூபா 3,485,723 ஆக இருந்த போதிலும் விரிவான வருமானக் கூற்றில் ரூபா 2,835,419 ஆக காண்பிக்கப்பட்டதன் காரணமாக மாற்றல் கொடுப்பனவு களிலான வருமானங்கள் ரூபா 650,304 குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | நிலையான வைப்பு வட்டி வருமானத்திற்கு மேலதிகமாக ஊழியர் கடன் வட்டி யும் இந்த வருமான விடயத்தில் உள்ளடக்கப் பட்டது. அதன் பிரகாரம் விரிவான வருமானக் கூற்றில் மாற்றல்கள் ஆன கொடுக்கல் வாங்கல்களில் வருமானம் மேலதிகமாக கணக்கீடு செய்யப்பட வில்லை. | கணக்கீடு செய்தல் சரியாக மேற்கொள் ளப்படல் வேண்டும். |

1.7 **இணங்காமை.**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை.**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | | இணக்கமின்மைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 132 ஆம் பிரிவு | கட்டளைச் சட்டத்தின் கீழ் ஸ்தாபிப்பதற்கு அல்லது பேணிச் செல்வதற்கான அதிகாரம் வழங்கப்படுகின்ற ஏதாவது பொது மக்கள் சேவை யொன்றை ஸ்தாபித்தல் அல்லது பேணிச்செல்லும் பணிகளுக்காக அந்த நகர சபையினால் உடன்படிக்கையில் கைச்சாத்திட வேண்டியிருந்த போதி லும் மத்திய பேருந்து நிலையத்தின் காணியில் அமைக்கப்பட்ட இரண்டு மலசல கூடங்களின் வருமான சேகரித்தல் எழுத்து மூல உடன்படிக்கை இன்றி | மத்திய பேருந்து நிலையத்தில் அமைந்துள்ள இரண்டு மலசல கூடங்களும் தனியார் பேருந்து நிலையங்களின் பக்கம் உள்ள மலசலகூடம் 2018 ஆம் ஆண்டிலும், பூகொட பேருந்து நிலைய பகுதியில் உள்ள மலசலகூடம் 2019.06.12 ஆம் திகதியும் தலைவரின் கட்டளையின் பிரகாரம் வழங்குவ தற்கு நடவடிக்கை | எழுத்து மூல உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | வெளித்தரப்பினருக்கு கையளிக்கப்பட்டிருந்தது. | எடுக்கப்பட்டிருந்தது. | |
| (ஆ) | 2017 திசம்பர் 12 ஆம் திகதிய இலக்கம் 02/2017 என்ற திறைசேரி சுற்றறிக்கை 2017 இன் இலக்கம் 02 | 2021 ஆம் ஆண்டின் போது முன்லேரியாவ கொடிகாவத்த பிரதேச சபையிலி ருந்து கிடைக்கப்பெற்ற மிட்சுபிசி டபள் கெப் வண்டி சபையின் பெயரில் கை யேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டி ருக்கவில்லை. | மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு செயலாளரின் மூலம் சபைக்கு கையே ற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | சொத்துக்களைக் கையேற்றல் விரைவாக மேற் கொள்ளப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் வருமானத்தை விஞ்சிய செலவினம் ரூபா 5,792,630 ஆக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 15,143,714 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கும், முன்னைய ஆண்டிற்கும் உரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2023 | | | | 2022 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மான மூலம் | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப்பட் ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப்ப ட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | | ரூபா 000’ | ரூபா 000’ | ரூபா 000’ | ரூபா 000’ | ரூபா 000’ | ரூபா 000’ | ரூபா 000’ | ரூபா 000’ |
| (i) | ஆதன வரியும் வரியும் | 32,285 | 33,816 | 21,243 | 12,573 | 32,211 | 32,142 | 22,543 | 28,955 |
| (ii) | வாடகை | 56,454 | 41,882 | 37,640 | 4,241 | 41,165 | 31,367 | 33,607 | 4,490 |
| (iii) | அனுமதி ப்பத்திரக் கட்டணம் | 1,297 | 569 | 569 | 0 | 1,293 | 237 | 1,095 | - |
| (iv) | ஏனைய வருமான ம் | 46,620 | 34,710 | 16,736 | 17,974 | 13,407 | 30,821 | 13,206 | - |
| | மொத்தம் | 136,656 | 110,977 | 76,188 | 34,789 | 88,076 | 94,567 | 70,451 | 33,445 |

**2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிக்கூற்றுக்களில் 2023 திசம்பர் 31 இல் உள்ளவாறு சபைக்கு அறவிட வேண்டிய நிலுவை ஆதனவரி வருமானம் ரூபா 27,254,299 மீதியாக இருந்தது. | 2023.12.31 வரை நிலுவை ரூபா 27,786,522 தொகையில் ரூபா 532,223 தொகை 2024.03.27 ஆம் திகதி வரை அறவிடப்பட்டுள்ள துடன் மிகுதி நிலுவைப் பணத்தை அறவிடுவதற் காக ஆதனங்களைத் தடை செய்யும் உத்தியோகத்தருக்கு நிலுவைப் பட்டியல் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட் டுள்ளது. | நிலுவை ஆதன வரியை அறவிடு வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) (i) | மீளாய்வாண்டின் இறுதியில் நிலுவைக் கடை வாடகை வருமானம் ரூபா 2,580,984 ஆகக் காணப்பட்டது. | நிலுவையை அறவிடுவதற்காக மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது என தயவுடன் அறியத்தருகின்றோம். | நிலுவைக் கடடை வாடகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | 2023 திசம்பர் 31 இல் உள்ளவாறு சபைக்கு அறவிட வேண்டிய நிலுவை விருந்தினர் விடுதி வாடகை ரூபா 9,181,373 ஆகும். | கூடிய விரைவில் இந்தக் கொடுப்பனவு களை மேற்கொள்வ தற்கு இணங்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது. | நிலுவை விருந்தினர் விடுதி வாடகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ)(i) | 2023 திசம்பர் 31 இல் உள்ளவாறு நிலு வை தண்டப்பண வருமானம் ரூபா 215,643 ஆகும். | அந்த நிலுவைப் பணத்தை அறவிடுவ தற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் 2023.12.31 இல் உள்ளவாறு நிலுவை ரூபா 299,655 ஆன தண்டப் பணத்தில் 2024 சனவரி மற்றும் பெப்ரவரி மாதங்களில் ரூபா 84,012 அறவிடப்பட்டுள்ளது. | நிலுவை தண்டப் பணத்தை அறவிடுவதற்கு சபை நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | களியாட்ட வரியாக ரூபா 516,862 திசம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை. | களியாட்டவரி பதிவேட்டின் பிரகாரம் அவ்வாறான நிலுவை ஒன்று காணப்பட வில்லை. | பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (iii) | மாகாண சபையின் பிரதம செயலாளரி டம் இருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடம் இருந்தும் 2023 திசபம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய நீதிமன்றத் தண்டப் பணம் ரூபா 299,655 மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 14,368,529 ஆகும். | பாதீட்டு மதிப்பீடு தயாரிக்கும் போது அந்த தொகை மதிப்பீடு செய் யப்பட்டுள்ளதுடன் நிலுவை தொடர்பாக குறித் துரைத்த ரீதியில் குறிப்பிட முடியாதிருந்தது. | உரிய கட்டணத்தை சரியாக இனங்கண்டு கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தாபனவிதிக் கோவையின் XIX அத்தியா யத்தின் 6.1 ஆம் பிரிவின் பிரகாரம் அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ வீடொன் றில் குடியிருக்க வேண்டிய காலம் 05 வருடங்களாக இருக்க வேண்டிய போதிலும் நகர சபைக்கு நிருவாக உரித்து கையளிக்கப்பட்ட 07 உத்தியோகபூர்வ இல்லங்களில் ஒரு உத்தியோகத்தர் 07 வருடங்கள் முதல் 29 வருடங்கள் வரையிலான கால வீச்சில் குடியிருந்து வருவதுடன் அந்த உத்தியோகத்தரின் உடன்படிக்கைக் காலம் 02 வருடங்கள் முதல் 06 வருட காலம் கடந்திருந்த போதிலும் அதற்குரிய உடன்படிக்கை நாளது வரையாக்கப்பட்டிருக்கவில்லை. | 07 உத்தியோகபூர்வ இல்லங்களில் 06 இல்லங்கள் உடன்படிக்கைக் காலத்தை விஞ்சி உடன்படிக்கை செய்யாமல் ஊழியர்கள் குடியிருந்து வருவதுடன் அந்த உத்தியோகபூர்வ இல்லங்களில் சட்ட ரீதியான உரித்தை கையளிப்பதற்காக பிரதேச செயலகம் நடவடிக்கை எடுக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளதுடன் 05 வருடங்களை விஞ்சிய உத்தியோ கபூர்வ இல்லங்க ளில் குடியிருக் கின்ற ஊழியர் களை அகற்றுவ தற்கு எதிர்பார்க் கும் பதிவேட்டில் காணப்படுகின்ற ஊழியர்களை அகற்றுவதற்கும் காத்திருத்தல் பட்டியலில் | உத்தியோகபூர்வ இல்லங்களில் சட்ட ரீதியான உரித்தை சபைக்கு கையேற் பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டி இருந்ததுடன் உடன் படிக்கையை நாளது வரையாக்குவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | இருக்கின்ற ஊழியர்களுக்காக உத்தியோகபூர்வ இல்லங்களை வழங்குவதற்கும் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் | |
| (ஆ) | 2022 சனவரி 02 ஆம் திகதி ஓய்வு பெற்றுச் சென்ற உத்தியோகத்தர் அவரின் உத்தியோ கபூர்வ இல்லத்தை மீள கையளிக்காமல் 02 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் குடியிருந்து வருவதுடன் அந்த உத்தியோகபூர்வ இல்லத்தை மீளப் பெற்றுக்கொள்வதற்கு (1978 இன் 42 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவனங்களின் உத்தியோகபூர்வ இல்லங்கள் சட்டம்) ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அவர் ஓய்வு பெற் றுச் செல்வதற்காக விண்ணப்பித்திருக்கும் போது உத்தியோகபூர்வ இல்லத்தை சபைக்கு கையளிக்குமாறு அறிவிக்கப்பட்ட போதும் அவர் கையளிக்காமையினால் அவரின் ஓய்வூதியம் சம்பளம் செலுத்துதலும் தாமதமடைந்துள்ளது. அவ்வாறே அந்த உத்தியோகபூர்வ இல்லம் அமைந்துள்ள காணிகளில் சட்ட ரீதியான உரித்தை சபைக்கு கையேற்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது. | உத்தியோகபூர் இல்லங்களின் உரித்தை கையேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 1988 ஆம் ஆண்டு முதல் அறவிட வேண்டிய தனியார் பேரூந்து நிலைய கட்டணங்களின் பெறுமதி ரூபா 230,700 ஆகும். | இந்த தொகையை தவறுதலாக சிட்டை யிடப்பட்டுள்ளமையால் அறவிட முடியாதுள்ள மீதியாக இனங்கண்டு பதிவழிப்பதற்காக உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது. | மீதியின் சரியான தன்மையை உறுதிப்படுத்துதல் வேண்டும். |

## 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2022 திசம்பர் 16 ஆம் திகதிய இலக்கம் 2311 என்ற வர்த்தமானி அறிவித்தலில் iv (ஆ) ஆம் பகுதியின் 2023 ஆம் ஆண்டிற்கான மோட்டார் வாகன கட்டணத்தை விதிப்பதற்குரிய 12-325/13ஆம் பந்தியின் பிரகாரம் முச்சக்கர வண்டிகளை நிறுத்தி வைத்தல் தொடர்பான உப விதியின் 4 ஆவது பிரிவின் பிரகாரம் மாதாந்தம் ரூபா 250 தொகையும், மும்மாதங்களுக்கு ரூபா 650 தொகையும் மற்றும் வருடாந்தம் ரூபா 2,000 தொகையாகவும் முச்சக்கர வண்டி நிறுத்திவைத்தல் அனுமதிப் பத்திரக் கட்டணம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண் டிற்காக கட்டணம் எதுவும் அறவிடுவதற்கு சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. சபையில் பதிவு செய்த முற்சக்கர வண்டி களின் எண்ணிக்கை 623 ஆக இருந்ததுடன் இந்தக் காரணங்களினால் சபைக்கு இழக்கப்பட்ட வருடாந்த வருமானம் ரூபா 1,246,000 தொகைக்கும் ரூபா 1,869,000 தொகைக்கும் இடையிலான பெறுமதி ஒன்று இழக்கப்பட்டிருந்தது. | முச்சக்கர வண்டி உப விதியில் ஏற்றுக்கொள் ளப்பட்ட பின்னர் 13 வாகனத் தரிப்பிடங்களின் கீழ் 20 சங்கங்கள் சபையில் பதிவு செய்யப்பட்டிருந்தது. முற்சக்கர வண்டி சங்கங்களின் அறிக்கை கோரப்பட்டு அந்த சங்கத்தின் சங்கம் செயற்படு நிலையில் காணப்படுமாயின் அனுமதிப் பத்திரம் விநி யோகித்து கட்டணத்தை அறவிடுவதற்கும் அவ்வா று அனுமதிப் பத்திரம் பெறாத முற்சக்கர வண்டிகளை பொலிஸின் மூலம் அகற்றுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். | வருமானத்தை சேகரிப்பதற்கு சபை நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2022 திசம்பர் 16 ஆம் திகதிய இலக்கம் 2311 என்ற வர்த்தமானி அறிவித்தலின் iv (ஆ) ஆவது பகுதியல் 12-325/8 ஆம் பந்தியின் பிரகாரம் ஒதுக்கப்பட்டுள்ள தனியார் வாகனத் தரிப்பிடத்திற்கு வெளியே வாகனங்கள் நிறுத்திவைப்பதற்காக கட்ட ணம் அறவிடுவதற்காக கட்டணம் தீரமா னிக்கப்பட்டிருந்த போதிலும் அதன் பிரகா ரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | வாகனங்களை நிறுத்துகின்ற இடங்களை இனங்கண்டு அந்த இடங்களிலிருந்து புதிய சந்தை கட்டிடத் தொகுதி நிர்மாணிக்கப் பட்டபின்னர் ஸ்தாபிக்கப்படுகின்ற மேலதிக வாகனத் தரிப்பிடங்களிலிருந்து கட்டண த்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வாகனத் தரிப்பிடங்களிலி ருந்து கட்டணங்களை முறையான பிரகாரம் அறவிடல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | வாகனத் தரிப்பிடங்களில் மேல் மாடியில் அமைந்துள்ள U கடைகள் 35 இற்காக ரூபா 38,511,660 கேள்வித் தொகை ஒன்று அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன் அந்த கேள் வித்தாரர்களிடமிருந்து 2012 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரை ரூபா 9,571,107 தொகையொன்று சபைக்கு பெறப்பட்டிருந்த போதும் 2023 ஒக்டோபர் 10 ஆந் திகதி வரையிலும் அந்தக் கடைகளின் நிர்மாணம் திட்டமிடப்பட்டு 11 வருடங்கள் கடந்திருந்த போதும் அந்த நிர்மாண நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | பேருந்து நிலைய மேல் மாடி (U) கடைகளை நிர்மாணிப்பதற்கு கேள்வி கோரி ஒரே தடவையில் செலுத்த வேண்டிய பணம் அறவிடப்பட்டுள்ளது. | நிர்மாண நடவடிக்கைகளை விரைவாக பூர்த்தி செய்தல் வேண்டும். |
| (ஈ) | பொது பேருந்து நிலைய மேல் மாடியில் 11 கடைகளுக்காக 2022 ஆம் ஆண்டின் போது ரூபா 4,600,000 தொகையில் ஆகக் கூடிய கேள்வி விலை தீர்மானிக்கப்பட்டு மதாந்தம் ரூபா 70,000 கடை வாடகைத் தொகையில் மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும் இந்தக் கடைகள் 2012 ஆம் ஆண்டு முதல் வாடகைக்கு வழங்குவ தற்கு சபை நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக 2012 ஆம் ஆண்டு முதல் இந்த கடைகளிலிருந்து பெறக்கூடியதாக இருந்த வருமானம் சபைக்கு இழக்கப்பட்டிருந்தது. | இந்த 11 கடைகளுக்காக 2017 ஆம் ஆண்டு முதல் கேள்வி கோரப்பட்ட போதும் அதற்காக கேள்விதா ரர்கள் முன்வந்திருக்கவில்லை. அவ்வாறே உள்ளூராட்சி ஆணையாளரின் LGD/13/2016(I) சுற்றறிக்கையின் பிரகாரம் கேள்வி நடைமுறைகள் இன்றி வாடகைக்கு வழங் கக் கூடிய இயலுமை காணப்படாதிருந்தமையால் நகர சபையின் மூலம் நடாத்திச் செல்லப்படுகின் ற கணனி வகுப்பொன்றை ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | கடைகளை வாடகைக்கு வழங்கி வருமானத்தை உழைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | மேல் மாகாண உள்ளூராட்சி ஆணையாள ரின் 2016 நவம்பர் 09 ஆம் திகதிய இலக்கம் 13/2016 என்ற சுற்றறிக்கையின் பிரகாரம் உள்ளூராட்சி நிறுவனங்களுக் குரிய வாடகை உடன்படிக்கையில் ஈடுபடுகின்ற ஒவ்வொரு கட்டிடத்திற்கும், காணிக்கும் உரிய உடன்படிக்கை ஏற்பட்ட திகதியில் இருந்து ஒவ்வொரு மூன்று | கடைகளுக்காக உடன் படிக்கை செய்யப்பட்டு பெறப்படுகின்ற வாடகை காலத்தை விஞ்சுவதற்கு முன் உரிய புதிய கடை வாடகை மதிப்பீடு வழங்குமாறு மதிப்பீட்டுத் திணைக்களத்தில் கோரப்பட்டுள்ள போதும் அந்த மதிப்பீடு இதுவரை | சுற்றறிக்கை ஆலோசனை யின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| வருடங்களுக்கும் ஒரு தடவை மாதாந்த வாடகை அரசாங்கத்தின் மதிப்பீட்டாளரின் அல்லது பட்டயம் பெற்ற மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் மீள் திருத்த வேண்டி யிருந்த போதிலும் சபைக்கு சொந்தமான 214 கடைகளின் மதிப்பீட்டு அறிக்கை 03 வருட காலத்தை விஞ்சி இருந்ததுடன் அந்த மதிப்பீட்டு அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு கடை வாடகை வருமானம் பெறப்படுகின்றமையின் காரணமாக சபைக்கு மேலும் பெறக்கூடியதாக இருந்த கடை வாடகை வருமானம் இழக்கப்பட்டிருந்தது. | சமர்ப்பிக்கப்படவில்லை. | |

**3.3 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **சபையின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| அவிசாவளை புதிய சந்தை தொகுதியில் R 09 கடையின் உரிமையாளர் மரணமடைந்ததன் காரணமாக உடன்படிக்கையின்றி மூன்றாம் தரப்பினருக்கு இந்தக் கடையின் வியாபார உரித்து அமைய அடிப்படையில் கையளிக்கப் பட்டிருந்ததுடன் 2017 ஒக்டோபர் மாதம் முதல் உரிய மாதாந்த வாடகைத் தொகையும் அற விடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. அதன் வாடகை உரித்தை கையளிப் பதற்கு பெறுகைகளின் மூலம் புதிய வாடகையாளரைத் தெரிவு செய்யுமாறு உள்ளூராட்சி உதவி ஆணையாளரால் ஆலோசனை வழங் கப்பட்டிருக்கும் போது 2020 திசம்பர் 03 ஆம் திகதிய உள்ளூராட்சி ஆணையாளரின் LGD/13/2016 (i) சுற்றறிக்கையின் ஆலோச னையை மீறும் வகையில் உப வாடகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந் தது. அதன் பிரகாரம் வருடாந்த மதிப்பீட்டின் அடிப்படையில் அறவிடப்படுகின்ற மாதாந்த வாடகையில் 60 மடங்கு கையளித்தல் கட்டணம், நிலுவை வாடகை ரூபா 8,006,180 மற்றும் பிணைவைப்பு ரூபா 72,000 அறவிடப்பட்டு கடையின் உரித்தை உரிமை கோராடு கின்ற தரப்பினருக்கு சபையால் 2023 யூன் | கடை தொடர்பாக இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் விசாரணையும் மற்றும் நீதிமன்ற நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுவதுடன் இது தொடர்பாக எதிர்காலத் தில் நடவடிக்கை முறை மற்றும் உடன் படிக்கையின் செல்லுபடித் தன்மை தொடர்பாக உள்ளூராட்சி ஆணையாளர் அலுவ லகத்தில் விசாரிக்கப்பட்டுள்ளதுடன் கடைகள் தொடர்பாக மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்படும். | சட்ட ரீதியான ஆலோசனையின் பிரகாரம் மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

21 ஆம் திகதி முதல் வாடகைக்கு ஐந்து வருட உடன்படிக்கை செய்யப்பட்டிருந்தது.

### 3.4 விளைவற்ற அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| முச்சக்கர வண்டிகள் 07 வருட காலங்கள் முதல் செயலிழந்த நிலையில் காணப்பட்டது. | உற்பத்தி செய்யப்பட்டு 10 வருட காலத்தை விஞ்சியிருந்தமையால் விற்றுத்தீர்க்கும் நடவடிக் கைகள் தொடர்பாக பொருத்தமான நடவடிக் கைகளை எடுப்பதற்காக 2023.12.21 ஆம் திகத உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | விற்றுத்தீர்க்கும் நடவடிக்கைகள் தாமதமின்றி மேற்கொள்ளப்படல் வேண்டும். |

### 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | 2023 திசம்பர் 31 இல் உள்ளவாறு பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம் இனங்காணப்பட்ட ஆதனங்களில் 134 ஆதன விடயங்களில் 117 எண்ணிக்கையொன்று சபையின் பேரில் கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நகர சபைக்கு சொந்த மாக இனங்காணப்பட்ட ஆதனங்களுக்கிடையே சட்ட ரீதியற்ற ஆதனங்கள் தொடர்பாக கையேற்கும் நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படுகின்றது. | ஆதனங்களை சட்ட ரீதியாக கையேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | சபை அதிகாரப் பிரதேசத்தில் பொது வசதிகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ள 17 காணி கட்டிடங்களில் தெரிவுப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டிருந்ததுடன் அதில் 03 காணிகளில் அனுமதியற்ற நிர்மாணங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் உரிய தரப் பினர் தொடர்பாக சபை சட்ட ரீதியான நடவடிக்கை எடுத்திருக்க வில்லை. | உரிய தரப்பினர் தொடர் பாக சட்ட ரீதியான நடவடிக்கைகளை எடுப்ப தற்கு தேவையான ஆவணங்கள் சபையிடம் காணப்படாதிருந்தமையால் மிகுதி நடவடிக்கைகளை எடுத்தல் பிரச்சினைக்குரியதான நிலையில் காணப்பட்டது. | பொது வசதிகளுடன் காணிகளில் சட்ட ரீதியான தன்மையை உறுதிப்படுத்து தல் வேண்டும். |

## 4. கணக்களிபொறுப்பும் நல்லாளுகையும்

### நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 63 செயலாற்றல் குறிகாட்டிகளில் 29 இற்காக இலக்குகளை அடைந்து கொள்ளும் சதவீதம் எவ்வளவு என செயலாற்றல் அறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | 2024 ஆம் ஆண்டின் போது இந்த இலக்கை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இலக்குகளை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |